**தேயிலை ஆராய்ச்சிச் சபை 2010**

---------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

---------------------------

**1.1 அபிப்பிராயம்**

----------------------------

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய தேயிலை ஆராய்ச்சிச் சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் எற்படும் தாக்கங்களைத் தவிர, தேயிலை ஆராய்ச்சிச் சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்தரைகள்**

-----------------------------------------------------------------

**1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்ஏஎஸ்)**

---------------------------------------------------------------------------------

(அ) தற்போதும் பயன்பாட்டிலுள்ள முற்றாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் இ.க.நி.18 இன் பிரகாரம் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குகெதிராகத் தொடரப்பட்ட நீதிமன்ற வழக்குகளிலிருந்து எழக்கூடிய நிகழத்தக்க பொறுப்புக்கள் இ.க.நி.12 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

--------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 ஆம் ஆண்டு தொடர்பானதும் பின்னர் கிடைத்திருந்தவையுமான ரூபா. 2,903,347 பெறுமதியான இடைப்போக்கிலுள்ள பொருட்களைச் சம்பந்தப்பட்ட கணக்குகளிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெருந்தோட்ட அபிவிருத்தி செயற்திட்டத்தினால் நன்கொடையாக அளிக்கப்பட்ட சொத்துக்களிற்கான மானியம் மற்றும் ஒதுக்குகள் கணிப்பீட்டு வழு காரணமாக ரூபா. 465,211 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

### 1.2.3 கிடைக்க வேண்டிய மற்றும் கொடுபடவேண்டிய கணக்குகள்

----------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான ரூபா. 57,945 தொகையான கிடைக்க வேண்டிய பகுப்பாய்வுக் கட்டணங்கள் இரண்டு ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்படாது இருந்தன.

(ஆ) காலப்பகுப்பாய்வின்படி, ரூபா. 322,267 தொகையான வர்த்தக மற்றும் நானாவித கடன்பட்டோர் 3 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாதிருந்தன.

(இ) பண்டங்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்காக 30 வெளி நிறுவனங்களிற்குச் செலுத்தப்பட்ட ரூபா. 304,161 தொகையான முற்பணங்கள் 5 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாதிருந்தன.

(ஈ) நிதிக்கூற்றுக்களின்படி, தொடர்ந்து செல்லும் செயற்திட்டங்களின் கீழுள்ள ரூபா. 256,561 மொத்த தொகையான மீதி 05 ஆண்டுகளிற்கு மேலாகப் பயன்படுத்தப்படாதிருந்தன.

### 1.2.4 இணக்கம் செய்யப்படாத மீதிகள்

-----------------------------------------------------

கணக்காய்வில் பின்வரும் இணக்கம் செய்யப்படாத மீதிகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பேரேட்டின்படியும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட பட்டோலைகளின்படியும் மீதிகளிற்கிடையில் ரூபா. 99,303,166 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையின் கடன்பட்டோர் பட்டோலை (சென்ற்கூம்ஸ் தொழிற்சாலைக் கணக்குகள்) மற்றும் இலங்கை தேயிலைச் சபை மற்றும் சிறு உடைமையாளர் அபிவிருத்தி அதிகாரசபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்கள் என்பவற்றுக்கிடையில் முறையே ரூபா. 680,669 மற்றும் ரூபா. 148,911 ஆன வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

(இ) ரூபா. 823,889,400 பெறுமதியான நிலையான சொத்துக்களை அவற்றின் உள்ள தன்மையை உறுதிப்படுத்துவதற்கு 2010 ஆம் ஆண்டின் கணிப்புச் சபை அறிக்கைகளுடன் இணக்கம் செய்வதற்கோ அல்லது சரிபார்ப்பதற்கோ முடியாதிருந்தது.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

---------------------------------------------------------------------------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1993 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு | பணிக்கொடைக்காக மேற் கொள்ளப்பட்ட ரூபா. 110,941,480 தொகையான மொத்த ஏற்பாடுகளில் |

| | |
|---|---|
| அதிகாரச் சட்டம் | ரூபா. 36,833,349 அல்லது 33.2% மட்டுமே 2011 மே 31 வரை முதலீடு செய்யப்பட்டிருந்தது. ஆகையினால் சபையானது எதிர்கால பொறுப்புக்களை தீர்ப்பதற்கேற்ப போதிய நிதிகளை முதலீடு செய்திருக்கவில்லை. |
| (ஆ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் | வரைபு ஆண்டறிக்கை நிதிக் கூற்றுக்களுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2002 நொவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | கணனிகள், கணணி உபபாகங்கள் மற்றும் மென்பொருட்கள் என்பவற்றிற்காக ஒரு நிலையான சொத்துப் பதிவேடு சுற்றநிருபம் அறிவுறுத்தல்களிற்கிணங்க பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------------------------------------

### 2.1 நிதிசார் விளைவுகள்

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா. 2.93 மில்லியனான தேறிய மிகைக்கெதிராக முன்னயை ஆண்டில் ரூபா. 15.74 மில்லியன் தேறிய பற்றாக் குறை ஏற்பட்டிருந்தது. அது நிதிசார் விளைவுகளில் ரூபா. 18.67 மில்லியனான முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. ரூபா. 15.73 மில்லியனால் செஸ்வரி வருமான அதிகரிப்பு மற்றும் சென்.ஐக்சின் தோட்டத்தின் இலாப அதிகரிப்பு என்பன நிதிசார் விளைவுகளின் முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 2.2 தோட்டங்களின் செயற்பாட்டு விளைவுகள்

---

சபை, சென்ற் கூம்ஸ் தோட்டம் மற்றும் சென்ற் யோகிம் தோட்டம் என்ற பெயருடைய இரு தோட்டங்களை முகாமை செய்திருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான இந்தத் தோட்டங்களின் செயற்பாட்டு விளைவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்படுகின்றது.

| **தேயிலை விற்பனைகள்** | **சென்ற் கூம்ஸ் மற்றும் லமிலியர் தோட்டங்கள்** | | **செனற் யோக்கிம் தோட்டம்** | |
|---|---|---|---|---|
| | **2010** | **2009** | **2010** | **2009** |
| அளவு (கிலோ கிறாம்கள்) | 246,924 | 297,575 | 496,847 | 245,201 |
| விற்பனைப் பெறுமதி (ரூபா'000) | 98,695 | 105,785 | 187,875 | 93,883 |
| ஏனைய வருமானம் (ரூபா'000) | 6,055 | 636 | 4,753 | 2,153 |
| மொத்த வருமானம் (ரூபா'000) | 104,750 | 106,421 | 192,628 | 96,036 |
| கழி: | | | | |
| மொத்த செலவினம் (ரூபா'000) | 99,509 | 98,201 | 191,494 | 102,279 |
| இலாபம்/(நட்டம்)(ரூபா'000) | 5,241 | 8,220 | 1,134 | (6,243) |
| ஒரு கிலோ கிராம் தேயிலைக்கான உற்பத்திக் கிரயம் (ரூபா) | 371.92 | 331.07 | 365.11 | 387.25 |
| ஒரு கெக்ரெயருக்கான விளைவு (கிலோகிராம்) | 2,011 | 2,105 | 1,016 | 888 |
| தேறிய விற்பனை சராசரி (ரூபா ஒரு கிலோ கிராமிற்கு) | 394.85 | 351.03 | 372.72 | 380.79 |

சென்ற் கூம்ஸ் தோட்டத்தின் விற்பனை அளவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டில் 50,651 கிலோகிராம்களால் குறைவடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான இலாபமும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டபொழுது ரூபா. 2,978,706 ஆல் குறைவடைந்திருந்தது. சென்ற் யோக்கிம் தோட்டத்தின் விற்பனை அளவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது 251,648 கிலோ கிராம்களால் அதிகரித்திருந்ததுடன் இலாபமும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்பொழுது ரூபா. 7,377,202 ஆல் அதிகரித்திருந்தது.

## 2.3 செயலாற்றல் மீளாய்வு

-----------------------------------

மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத்திட்டம் பௌதீக இலக்குகளைக் காட்டாமல் நிதிசார் இலக்குகளுடன் மட்டுமே தயாரிக்கப்பட்டிருந்தது. ஆகையினால் சபையின் பௌதீக செயலாற்றலை இலக்கிடப்பட்ட செயலாற்றலுடன் திருப்திகரமாக ஒப்பீடு செய்ய முடியவில்லை. எனினும் தரப்பட்ட தகவல்களின்படி, சபையின் நிதிசார் செயலாற்றல் கீழே தரப்படுகின்றது.

| | நிகழ்ச்சித்திட்டம் | ஆண்டிற்கான ஒதுக்கீடு | | | உண்மையான செலவினம் | | | சதவீதமாக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டுவரும் | மூலதனம் | மொத்தம் | மீண்டுவரும் | மூலதனம் | மொத்தம் | % |
| | | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் |
| i. | பயிர் முன்னேற்றம் | 12.69 | 6.35 | 19.04 | 12.33 | 4.18 | 16.51 | 86.71 |
| ii. | காணி உற்பத்தி நிலை முன்னேற்றம் | 8.70 | 6.72 | 15.42 | 10.09 | 6.52 | 16.61 | 107.71 |
| iii. | பயிர் முகாமைத்துவம் | 23.81 | 7.32 | 31.13 | 23.50 | 4.95 | 28.45 | 91.39 |
| iv. | பின் அறுவடை தொழில் நுட்பம் | 11.66 | 2.93 | 14.59 | 12.61 | 2.89 | 15.50 | 106.23 |
| v. | வளங்கள் திட்டமிடல் | 2.77 | 0.73 | 3.50 | 2.11 | 0.17 | 2.28 | 65.14 |
| vi. | உடைமையாளர்களிற்கான சேவைகள் | 34.23 | 19.34 | 53.57 | 33.57 | 8.73 | 42.30 | 78.83 |
| vii. | ஆராய்ச்சி முகாமைத்துவம் | 110.37 | 17.69 | 28.06 | 109.20 | 5.88 | 115.08 | 89.86 |
| viii. | உள்ளக சேவைகள் மற்றும் பராமரிப்பு | 51.39 | 8.92 | 60.31 | 51.80 | 8.27 | 60.07 | 99.66 |
| | மொத்தம் | 255.62 | 70.0 | 325.62 | 255.20 | 41.60 | 296.80 | 91.15 |

**2.4 தொழிற்பாட்டு திறமையீனங்கள்**

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்குத் தரப்பட்ட தகவல்களின்படி, முழுச்சம்பளத்துடனான கல்வி விடுவிடுமுறைகளைப் பெற்றதுடன் கட்டாய சேவைக்காலத்திற்கு சேவையாற்றத்தவறிய 10 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா. 27,152,046 ஆன தொகை கிடைக்க வேண்டியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்தத் தொகை சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து 2011 மே 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையானது சென்ற யோக்கிம் தேயிலைத் தொழிற்சாலைக்கு தேயிலைக் கொழுந்தை வழங்குவதற்காக 2010 பெப்ரவரி 02 இல் ரூவான்புர கமிடிறிய கொபத்த சமாகம (கமிடிறியா) உடன் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையை (எம்ஓயூ) கைச்சாத்திட்டிருந்தது.

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) உடன்படிக்கையின்படி, 2010 பெப்ரவரி தொடக்கம் திசெம்பர் வரை 1,635,000 கிலோகிராம் தேயிலைக் கொழுந்தை வழங்குவதற்கு கமிடிறியா இணங்கியிருந்தது. எனினும், இந்தக் குறிப்பிட்ட காலத்தில் கமிடிறியா, 1,077,058 கிலோகிராம் (65.87%) தேயிலைக் கொழுந்தையே வழங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) கணக்காய்வு மாதிரிச் செவ்வயில் புரிந்துணர்வு உடன்படிக்கையின் (எம்ஓயூ) பந்தி சீ (2) இன் படி, தேறியலைக் கொழுந்தின் உடன்பட்ட தரத்தை கமிடிறியா வழங்கியிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(iii) கபிடிறி குறைந்த அளவு மற்றும் குறைந்த தரத்தினையுடைய தேயிலை கொழுந்தை வழங்கியிருந்தபோதிலும், ரூபா. 1,008,000 ஆன தொகை சென்ற்யோக்கிம் தோட்டத்தினால் முகாமைத்துவ கட்டணம் மற்றும் ரூபா. 1,168,079 தொகையான இலாபத்தில் 33 சதவீதம் என்பன புரிந்துணர்வு உடன்படிக்கையின் வேண்டுதல்களைக் கருத்திற் கொள்ளாது செலுத்தப்பட்டிருந்தன.

தலைவரின் கருத்துரையின்படி, உடன்படிக்கையின்படி, தோட்டமானது புரிந்துணர்வு உடன்படிக்கையின் நிபந்தனைகளை சரியாக பின்பற்றும் நிலையிலிருக்கவில்லை. அது உள்ளெடுக்கப்பட்ட தேயிலைக் கொழுந்தின் அளவினால் பாதிக்கப்படக்கூடிய எம்/எல் கமிடிறியாவை தடுப்பது சிக்கலை ஏற்படுத்தலாம், என்பதாகும்.

(இ) 2007 ஆம் ஆண்டிலிருந்து நடைபெறும் வேலைகள் கணக்கில் காட்டப்பட்ட ரூபா. 7,089,920 கூட்டுமொத்தத் தொகையான ஒப்பந்த நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதிவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் இந்த பூர்த்தியடையாத நடவடிக்கைகளிற்காக செலுத்தப்பட்ட தொகை பணிப்பாளர் சபை மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாது மீளாய்வாண்டின் இலாபத்திலிருந்து பதிவழிப்புச் செய்யப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1982 ஆம் ஆண்டிலிருந்து லோவறி தேயிலை பதனிடும் செயற்திட்டமாக நடைபெறும் வேலைகள் கணக்கில் ரூபா. 4,142,173 ஆன தொகை காட்டப்பட்டிருந்தது. 1997 யூலை 23 ஆம் திகதிய கணிப்புச்சபை அறிக்கைகளின்படி சபையால் ஆறு இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டு மலைநாட்டில் ஆறு தொழிற்சாலைகளில் நிறுவப்பட்டிருந்தன. தரப்பட்ட தகவல்களின்படி, இந்த இயந்திரங்கள் இலங்கை தேயிலையை பதினிடுவதற்கு பொருத்தமானதா என்பது பற்றி பரிசோதனை செய்வதற்காக கொண்டுவரப்பட்டடன. லோவறி தேயிலை பதனிடும் (எல்ரீபீ) இயந்திரங்கள் இலங்கையில் தேயிலை உற்பத்தி நடைமுறைக்கு பொருத்தமற்றதென்ற பெறுபேற்று அளித்ததுடன் அதன் பிரகாரம் செயற்திட்டம் கைவிடப்பட்டது. எனினும், அந்த இயந்திரங்கள் இந்த அறிக்கைத் திகதி வரை பயன்பாடற்றிருந்ததுடன் அவை பொருத்தப்பட்ட தொழிற்சாலைகளிலிருந்து அந்த இயந்திரங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) சென்றியோக்கிம் தோட்டத்திற்காக 2005 ஆம் ஆண்டில் இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட காணி அளவைத் திட்டத்தின்படி, 143.810 கெக்டயர்களான காணியின் மொத்தப் பரப்பில் 17.675 கெக்டயர்கள் நீண்ட காலமாக வெளியார் தரப்பினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்ததுடன் நிரந்தரமான வீடுகள் நிருமாணிக்கப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்ட காணியில் பயிர் செய்யப்பட்டிருந்தன. அந்தக் காணிகளிலிருந்து விலகும்படி அந்த மக்களிற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் இத்தகைய ஆக்கிரமிப்புக்கள் காரணமாக தோட்டமானது, நெல், தேயிலை, இறப்பர், தென்னை மற்றும் ஏனைய பயிர்கள் என்பவற்றின் பயிர் செய்கைகளிலிருந்தான வருமானத்தை இழக்கிறதென்று அவதானிக்கப்பட்டது.

(இ) சென்ற் யோக்கிம் தோட்டத்திற்கு சொந்தமான சுமார் 2 கெக்டயர் காணி, எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்று கணக்காய்வு பரிசொதனையில் அவதானிக்ப்பட்டது. தலைவரின் கருத்துரையின்படி, சொல்லப்பட்ட அந்தக் காணியின் மண், தேயிலைப் பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமற்றதுடன் தோட்டம் 2011 இன் 3 ஆம் காலாண்டு மற்றும் 2012 ஆம் ஆண்டில் இறப்பர் பயிரிடுவதற்காக இந்தக் காணி ஏற்கனவே ஒதுக்கப்பட்டது என்பதாகும்.

(ஈ) தேயிலை ஆராய்ச்சி சபையாலோ அல்லது சென்ற் தோட்டத்தாலோ அனுமதிக்கப்படாத வெளித்தரப்பினர்கள் பெருந்தொகையான காணிப்பரப்பில் மரக்கறி வகைளைப் பயிர் செய்திருந்ததுடன் சபை மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சிடமிருந்து பொருத்தமான அங்கீகாரம் பெறாது பெருந்தொகை இலாபத்தை உழைக்கின்றமை அவதானிக்கப்பட்டது.

## 2.6 மனிதவள முகாமைத்துவம்

--------------------------------------------

செனற் யோக்கிம் மற்றும் செனற் கூம்ஸ் தோட்டங்கள் நீங்கலாக சபையின் ஆளணி நிலைமை 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 321 ஆக இருந்ததுடன் அதில் 103 பதவிகள் வெற்றிடங்களாக இருந்தன. இந்த 103 இல் 20 வெற்றிடங்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் பரிசோதனை உத்தியோகத்தர்களென்று அவதானிக்கப்பட்டது. தொழிற்சாலை வேலைகளிற்காக ஈடுபடுத்தப்பட்ட அமைய தொழிலாளர்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குத் தரப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------------------------

கணக்காய்வின்போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் மேற்கொள்ப்பட்ட அவதானிப்புக்கள் காலத்திற்குக் காலம் சபையின் தலைவரின் கவனத்திற்குத் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) முற்பணங்களின் தீர்ப்பனவு

(ஆ) கிடைக்க வேண்டியவைகள் மற்றும் பெறுவேண்டியவைகள்

(இ) ரொக்கக் கட்டுப்பாடு

(ஈ) சொத்துக்களின் முகாமைத்துவம்

(உ) பௌதீக செயலாற்றல்